**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**O.S. 284/2008**

**நாள்.17.06.2026**

**பிவா.சா.3-பெரியக்காள்**

**க/பெ - பழனிச்சாமி**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தை யார் தயார் செய்தார் என்றால் நான் சொல்ல எனது வழக்கறிஞர் தயார் செய்தார்.

2. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

3. வழக்கின் 2ம் பிரதிவாதி மூக்கனம்பலம் எனது தகப்பனார் என்றால் சரிதான்.

4. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் படிப்பறிவு இல்லை. விஸ்தீரணம் எவ்வளவு என்றால் பத்திரத்தில் உள்ளபடி விஸ்தீரணம் உள்ளது.

5. வழக்கு சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் பத்திரத்தில் உள்ளபடி நான்குமால் கண்டுள்ளது. எனக்கு படிப்பறிவு இல்லை.

6. தாவா வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம் வாதி குப்பம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

7. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது அப்பா கிரையம் பெற்ற சொத்துக்களின் விவரங்களை கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா கிரையம் பெற்ற சொத்துக்களில் 29.09.1980, 24.07.1982 ஆகிய தேதிகளில் 2ம் பிரதிவாதியான எனது அப்பா முருகனம்பலத்திடம் இருந்து கிரையம் பெற்ற சொத்துக்களை பொறுத்து ஆட்சேபித்து வாதிகள் வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் சரிதான்.

8. 2ம் பிரதிவாதியான என் தகப்பனார் 14.11.1970ல் ஆண்டிப்பெருமாள் அம்பலத்தின் மனைவி குப்பம்மாள் என்றால் குப்பாயம்மாளிடம் இருந்து பெற்ற கிரைய சொத்தையோ, 13.06.1980ல் 2ம் வாதி நாச்சம்மாளிடம் இருந்து பெற்ற கிரைய சொத்தையோ, 29.06.1981 ல் 2ம் பிரதிவாதி வாங்கிய கிரைய சொத்துக்கள் பற்றியோ வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

9. வழக்கு சொத்துவிவரத்தில் 7 வது இலக்க சொத்தாக சர்வே எண்.578/3 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தை தான் பார்க்கவேண்டும்

10. 1,2 வாதிகள் சர்வே எண்.578/3 க்கு கட்டுப்பட்ட சொத்தை கடந்த 01.08.1981 ல் ஆண்டியம்மாள் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் 1,2 வாதிகள் சர்வே எண்.578/3 க்கு கட்டுப்பட்ட சொத்தை ஆண்டியம்மாளுக்கு கிரையம் செய்யவில்லை என்றாலும், அவர்கள் கிரையம் செய்து கொடுத்தது சர்வே எண்.578/1 க்கு கட்டுப்பட்ட சொத்து தான் என்றாலும் சரியல்ல. அதனால் இவ்வழக்கில் ஆண்டியம்மாளை வழக்கின் தரப்பினராக சேர்க்க தேவையில்லை என்றால் சரியல்ல.

11. சர்வே எண்.578/3 க்கு கட்டுப்பட்ட சொத்தில் 31 செண்ட் நிலத்தை முருகனம்பலம் மற்றும் மு.க.ராமன் ஆகியோர் சேர்ந்து சண்முகம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தை வாதிகள் சண்முகத்திற்கு கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் சண்முகத்தை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**